அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 8

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. உயிர்க்குறில் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. ஐந்து
   2. ஏழு
   3. பன்னிரண்டு
   4. பதினெட்டு

2. ஐந்து இசைத்தூண்கள் காணப்படும் இடம்
   1. சிதம்பரம்
   2. மதுரை
   3. யாழ்ப்பாணம்
   4. திருச்சி

3. நைல் ஆற்றின் அணை தமிழரால்
   1. கட்டியது
   2. கட்டப்பட்டது
   3. கட்டினார்
   4. கட்டுவார்கள்

4. தமிழிசையின் நுணுக்கங்களைக் கூறும் நூல்
   1. சிலப்பதிகாரம்
   2. மணிமேகலை
   3. குண்டலகேசி
   4. வளையாபதி

5. வெண்ணிறப் பூக்கள் உதிர்வன போல பனி கொட்டியது. இதில் உவமானம்
   1. வெண்ணிறப்பூக்கள்
   2. பனி
   3. போல
   4. வெண்ணிறம்

6. கயிலாயவன்னியன் ஐரோப்பியருக்குத் திறை செலுத்த மறுத்தார். திறை என்பதன் பொருள்
   1. சம்பளம்
   2. நட்டஈடு
   3. வரி
   4. சன்மானம்

7. ஒருவர் தான் கற்றுத்தேர்ந்த கலையைப் பலர் முன் முதன்முதலாக மேடையேற்றுவது
   1. ஒத்திகை
   2. வெள்ளோட்டம்
   3. அரங்கேற்றம்
   4. தேரோட்டம்

மாதிரித் தேர்வுத்தாள்

1 2 3 4

8. மலையக மக்களின் துன்பநிலை மாறவேண்டும். துன்பம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. துயரம்
   2. இன்பம்
   3. கவலை
   4. வறுமை

9. மகாகவி து. உருத்திரமூர்த்தி பிறந்த ஊர்
   1. மட்டக்களப்பு
   2. மன்னார்
   3. வவுனியா
   4. அளவெட்டி

10. காகம் கரையும் அதுபோல குயில்
   1. கீச்சிடும்
   2. கூவும்
   3. அலறும்
   4. அகவும்

11. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்பெறும் விழா
   1. வைரவிழா
   2. மணிவிழா
   3. பொன்விழா
   4. பவளவிழா

12. ஆண்டுவிழாவில் எழிலனால் நாடகம் நடிக்கப்பட்டது. இதில் மூன்றாம் வேற்றுமை ஏற்றசொல்
   1. நாடகம்
   2. நடிக்கப்பட்டது
   3. எழிலன்
   4. விழா

13. பனி நிறைந்த வரைகள் அழகாகக் காட்சியளித்தன. இதில் வரைகள் என்பது
   1. காடுகள்
   2. ஆறுகள்
   3. மலைகள்
   4. கடல்கள்

14. நான் நேற்று மிதியுந்திற் சென்றேன். இதில் நான்
   1. தன்மைப் பன்மை
   2. தன்மை ஒருமை
   3. முன்னிலை ஒருமை
   4. படர்க்கை ஒருமை

**1 2 3 4**

15. உணவு உண்ட சிறுவன் உறங்கினான். இச்சொல்லியத்தில் பெயரெச்சம்
    1. சிறுவன்
    2. உறங்கினான்
    3. உண்ட
    4. உணவு

16. அறநூற்காலம் என்று அழைக்கப்படுவது
    1. சங்ககாலம்
    2. சங்கமருவியகாலம்
    3. பல்லவர்காலம்
    4. சோழர்காலம்

17. ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது
    1. மொழி
    2. மதம்
    3. சொத்து
    4. புகழ்

18. சிறுமியின் பேச்சு சாலச்சிறந்தது. இதில் உரிச்சொல்
    1. சிறுமி
    2. சால
    3. பேச்சு
    4. சிறந்தது

19. உழவனுக்கு உழத்தி போல பாடகனுக்கு
    1. பாடவி
    2. பாடலி
    3. பாடன்
    4. பாடகி

20. ஐரோப்பாவில் தமிழர் அதிகம் வாழும் நாடு
    1. சுவிற்சர்லாந்து
    2. பிரான்சு
    3. இத்தாலி
    4. ஐக்கிய இராச்சியம்

21. நரம்புக்கருவிகளுள் ஒன்று
    1. யாழ்
    2. மேளம்
    3. ஏழில்
    4. தாளம்

மாதிரித் தேர்வத்தாள்

1 2 3 4

22. ஊர் மகிழ்ந்தது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்
   1. தொழிலாகுபெயர்
   2. சினையாகுபெயர்
   3. பொருளாகுபெயர்
   4. இடவாகுபெயர்

23. நாள்தோறும் பழங்கள் உண்போம். இச்சொல்லியத்திலுள்ள இடைச்சொல்
   1. உண்போம்
   2. பழங்கள்
   3. தோறும்
   4. நாள்

24. வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல்
   1. இடைச்சொல்
   2. வினைச்சொல்
   3. உரிச்சொல்
   4. பெயர்ச்சொல்

25. தமிழ்மறை எனப் போற்றப்படுவது
   1. நாலடியார்
   2. ஆத்திசூடி
   3. திருக்குறள்
   4. மூதுரை

(25X1=25 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் விளங்க சொல்லியம் எழுதுக.**

1. புன்சிரிப்பு

______________________________

______________________________

2. வணிகம்

______________________________

______________________________

3. குடியுரிமை

______________________________

______________________________

(3X2=6 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பாடலுக்கான வினாக்களுக்கு விடை எழுதுக.**

மிக்க நலமுடைய மரங்கள் - பல
விந்தைச் சுவையுடைய கனிகள் - எந்தப்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள் - அங்கு
பாடி நகர்ந்துவரும் நதிகள் - ஆசை
பெற விழிக்கும் மான்கள் - உள்ளம்
அஞ்சக் குரல் பழகும் புலிகள் - நல்ல
நேசக் கவிதைசொல்லும் பறவை - அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு

- மகாகவி பாரதியார்

1. நதிகள் எவ்வாறு வருகின்றன எனக் கவிஞர் கூறுகிறார்?

________________________________________

2. 'விந்தைச் சுவையுடையவை கனிகள்' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

________________________________________

3. அஞ்சக்குரல் பழகுவது எது?

________________________________________

4. இப்பாடல் எத்தகைய சூழலைக் காட்சிப்படுத்துகிறது?

________________________________________

(4x1=4 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**4. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் இரண்டு எழுதுக.

2. சங்கமருவிய காலப்பகுதியில் இயற்றப்பட்ட நூல்களை எவ்வாறு அழைப்பர்?

3. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான தமிழர்கள் புலம்பெயர்ந்தமைக்கான காரணங்களுள் ஒன்றினை எழுதுக.

4. தமிழரின் இசைக்கருவிகளின் வகைகள் எவை?

5. நாங்கள் சுவிசிலிருந்து புறப்பட்டோம். இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

   வேற்றுமை உருபு: ____________________ பொருள்: ____________________

6. யாழினியின் குரல் தேன் போன்று இனிமையானது. இச் சொல்லியத்தில் வந்துள்ள உவமானம், உவமேயம் என்பவற்றை எழுதுக.

   உவமானம்: ____________________ உவமேயம்: ____________________

7. தனிநாயகம் அடிகளார் மொழிகள் பலவற்றைக் கற்றுப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றினார். இத்தொடர்ச் சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக எழுதுக.

(5X2=10 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொல்லியங்களை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. பனிகாலத்தில் குளிர் அதிகம்.

______________________________________________

2. நாம் தாய்மொழியை விருப்புடன் கற்போம்.

______________________________________________

3. உதவி செய்தவரை நன்றியுடன் நினைப்போம்.

______________________________________________

4. நல்ல நல்ல நூல்களை வாசிப்போம்.

______________________________________________

5. தமிழர் வாழ்வில் இசை முதன்மை பெறுகிறது.

______________________________________________

(5×1=5 புள்ளிகள்)

**6. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழிசை
2. தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலம்
3. நீங்கள் சென்ற கல்விச் சுற்றுலா
   - சுற்றுலாவுக்கு அணியஞ்செய்தல்
   - சுற்றுலாவின்போது பார்வையிட்டவை
   - சுற்றுலாவினால் அடைந்த பயன்கள்

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கேள்வித்தாள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இலக்கியங்களிலே தொகுக்கப்பட்டுள்ள செய்யுள்கள் யாவும் சங்ககாலச் செய்யுள்கள் என்று கருதப்படுகின்றன. அந்நூல்களை அகம், புறம் எனப் பிரித்துத் தொகுத்துள்ளனர். அரசர்களின் வீரச்செயல், கொடைச்சிறப்பு, ஆட்சித்திறன் முதலியவற்றையும், சங்ககால மக்களுடைய புறவாழ்வு முறைகளையும், சங்ககாலச் சான்றோர் எனப் போற்றப்படும் அக்காலத்துப் புலவர்களுடைய சிறப்புடைய குணங்களையும் புறநானூற்றுச் செய்யுட்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அக்கால முடியுடை வேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள் முதலானோரின் வரலாறுகளை நாம் அறிந்து கொள்ளவும் சங்ககால இலக்கியங்கள் உதவுகின்றன. இந்நூல்களில் உள்ள செய்யுட்கள் யாவும் கவிச்சுவை நிரம்பியவை. உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்புடையன. அத்துடன், பொருட்தெளிவு உடையனவாக விளங்குகின்றன. அச்செய்யுட்களில் வெற்றுச்சொல் காண்பது அரிது. அக்காலத்தில் மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றினர். புலவர்களால் மதித்துப் பாடப்பெறுதல் பெரும்பேறெனக் கருதி வாழ்ந்தனர்.

1. சங்ககாலச் செய்யுட்கள் என்று கருதப்படுபவை எவை?

______________________________________________

2. புறநானூற்றுச் செய்யுள்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அரசர்கள் பற்றிய சிறப்புகள் எவை?

______________________________________________

______________________________________________

3. சங்ககால இலக்கியங்கள் யார், யாருடைய வரலாறுகளை அறிந்துகொள்ள உதவுகின்றன?

______________________________________________

______________________________________________

4. சங்ககால மன்னர்கள் எதனைப் பெரும்பேறெனக் கருதினர்?

______________________________________________

______________________________________________

5. சங்ககால நூல்களில் உள்ள செய்யுட்கள் எப்படிப்பட்டவை?

______________________________________________

______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. அதனால், அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்து விளையாடலாம் என்று எண்ணி, வீட்டுக்கு விரைந்தாள்.
2. தமிழ்விழி தமிழ்ப்பள்ளியால் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தாள்.
3. சிறுவர்கள் பூம்பனியில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.
4. ஆனால், 'வீட்டில் அம்மா காத்துக் கொண்டிருப்பார்' என்பது நினைவுக்கு வந்தது.
5. அவளுக்கு, தானும் விளையாட வேண்டும் போலிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5×1=5 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கோவைத்தாள்